

பொய்யாமொழி

ஆசிரியர்_ா. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
'பொய்யா மொழி'க்கும் பொருளொன்றே—செய்யா

அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 5 (20—12—50) புதன்கிழமை. { மணி 17

1009 / 4-50.

பஞ்சக்கொடுமை!

—:(சொல்லேருழவன்):—

OFFICE OF THE ... 27 DEC 1950 MADRAS

1 உணவு உற்பத்தி ஓங்க வேணுமென்று
ரேடியோ முழங்குதடா — ஆனால்
உழைக்கிற ஏழைக்குடியானவனுக்குக்
கொழுக்கம்பி கிடைக்கலடா

2 கிணறுவெட்ட பணம் கொடுக்கிற மான்யம்
ஏழைகட் கில்லையடா — ஆனால்
கிணறுபேரைச் சொல்லிப் பணத்தை மூட்டைகட்ட
கெவர்மெண்டு கொடுக்குதடா

3 ஏழைபேரைச் சொல்லி ரேஷன் கடையிலே
ஏராள லாபமடா — வயிற்றுக்
கில்லை என்று பசியாளி கேட்டுவிட்டால்
எத்தனை கோபமடா

4 நாழி அரிசிக்கு வழியில்லாதவர்க்கு
ஞாயம் கிடைக்காது — சும்மா
நல்ல கோட்டு சட்டை மாட்டிய பேருக்கு
அரிசிக்குத் தடையேது

5 லஞ்சம் வாங்குவது தப்பிதமென்று
நன்றாய்த் தெரியுதடா — ஆனால்
லஞ்சம் கொடுக்காமல் எந்தக் காரியமும்
நடப்பதாய்த் தெரியலடா

6 நெஞ்சம் அழுத்தமாய் இருக்கிற பேருக்கு
நீதி தெரியாது — தன்
நினைவு பூராவும் பணத்திலே உடையவர்க்கு
பாபமே தெரியாது

7 கஞ்சி குடிக்கிற ஏழைகள்கஷ்டம்
கடுகளவும் போச்சா — திரு
காந்தி சொன்னபடி நீதி ஆட்சி முறை
தினையளவும் ஆச்சா

8 மிஞ்சிப் பேசினால் சட்டம் தலைக்குமேல்
மிதிக்கப் பார்க்குமடா — ஆனால்
வேண்டிய மட்டும் பொறுத்துப் பார்த்தும்
நெஞ்சம் கேட்கலடா

9 அஞ்சி அஞ்சி பயந்தெத்தனை நாளைக்கு
ஆந்தைபோல் இருப்பதடா — ஏழை
அவதியைக் கண்ணால் பார்த்துப் பார்த்துதினம்
யாருக்கு பொறுக்குமடா

10 நஞ்செயும் புஞ்செயும் பாடுப்பட்டாலே
நன்றாய் விளையுமடா — ஆனால்
இராத்திரி சோற்றுக் கில்லாதவனுக்கு
நன்செய் இல்லையடா.

சென்ற இதழ் தொடர்ச்சி

மகாபாரதம்

வில்லிதரும் விளக்கம்

ஆதிபருவம்) (குருகுலச்சருக்கம்

ஆசிரியர் ப. s. இராமசாமி பிள்ளை, செயங்கோண்டம்.

முன்பு சந்திரன் புத்திரனுகிய புதனும், வைவசுத மனுவின் புத்திரனுகிய சுத்தியுமநன் என்பவன், உமா தேவியின் சாபத்தால் பெண்ணுருவை அடைந்த இளை என்னும் பெண்ணும் புரூரவாஎன்பவனைப் புத்திரனுகப் பெற்ருர்கள் என்றும், அந்த புரூரவா என்பவன் அழகிலும் வலிமையிலும் முறையே மன்மதனையும் சுப்பிரமணியனையும் ஒத்துவளர்ந்தான் என்றும் கூறிய செய்யுளைப்பற்றி ஆராய்ந்தோம் இப்போது அடுத் துள்ள செய்யுளில் இந்திர உலகத்துத்தேவ மாதர்களில் அழகிற் சிறந்தவளாகிய உருப்பசி என்பவள் ஒருசோலை யில் உலாவிக் கொண்டிருக்கையில் அசுரர்கள் அவளைக் கண்டு அவள்மேல் விருப்பங்கொண்டு அவளைத் தம்வயம் அகப்படுத்திக்கொண்டு ஆசாயவழியாகச் சென்றனர் என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி ஆராய்வோம்.

அச்செய்யுள்;—

"பொருப்பினைச் சிறகரிந்தவன் புரத்து மங்கையருள்
உருப்பசிப்பெயர் ஒண்டொடி உருவினிற் சிறந்தாள்
தருப்பொழிற் பயில்காலையில் தானவர் காணு
விருப்புறக் கவர்ந்தேகினர் அவளுடன் விசும்பில்"

என்பதாம்.

இ—ள்: பொருப்பினை-மலைகளின், சிறகு-இறகு களை, அரிந்தவன்-அறுத்தவனுகிய இந்திரனது, புரத்து-தேவஉலகத்திலுள்ள, மங்கையருள்-நாடக அரம்பை யருள், உருப்பசி பெயர் - உருப்பசி என்னும் பெயரை உடைய, ஒண்தொடி - ஒளிபொருந்திய வளையலை அணிந்த பெண். உருவினில்-அழகில், சிறந்தாள்-மேம்பட்டவள் ஆனுள், தரு-வளங்கள்நிரம்பிய பொழில்-ஒரு சோலையில் பயில்காலையில்-(அவ்ள்) சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், தானவர்-அசுரர், காணு - (அவளைக்) கண்டு, விரும்பு உற-(அவள்மேல்) இச்சைஉண்டாக கவர்ந்து-(அவளைத்) தம்வயம் அகப்படுத்திக்கொண்டு, அவளுடன் - அந்த உருப்பசியுடன், விசும்பில்-ஆகாயமார்க்கமாக, ஏகினர்-சென்றனர். (எ—று.)

இ—பு: மலைகளின் இறகுகளை அறுத்தவனுகிய இந்திரனது தேவஉலகத்திலுள்ள நாடக அரம்பையருள் உருப்பசி என்னும் பெயருடைய ஒளிபொருந்திய வளையலையணிந்தபெண் அழகில் மேம்பட்டவளானுள். வளங்கள் நிரம்பிய ஒருசோலையில் அவள் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், அசுரர் அவளைக்கண்டு அவள்மேல் இச்சையுண்டாக அவளைத் தம்வயம் அகப்படுத்திக் கொண்டு அந்த உருப்பசியுடன் ஆகாயமார்க்கமாகச் சென்றனர். என்பதாம்.

குறிப்பு:—இச்செய்யுளில் கூறிய வரலாறு வருமாறு:- கிருதயுகத்தில் மலைகளெல்லாம் சிறகுகளையுடையன வாய்ப் பூவுலகில் எங்கும் பறந்து பட்டணங்கள் மீது சென்றுபடிந்து அந்தப்பட்டணங்களையும் அவற்றிலுள்ள ஜனங்களையும் நாசஞ்செய்து வந்தன. அதுகண்ட இந்திரன் மலைகளின் சிறகுகளை அரிந்து அவைபறவாத படிதடுத்தான். அந்த சமயத்தில் மைநாகன் என்னும் மலைமாத்திரம் வாயுதேவனது சகாயத்தால் தப்பிஓடிச் சமுத்திரத்தில் ஒளிந்தான் என்பதாம் (தொடரும்)

வாழ்த்துக்கள்.

G. சின்னதம்பி மூப்பனர்,
அழகியமணவாளன்.

ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

பொய்யாமொழி செய்த புவிப்போற்றும்பொய்கைதனில்
மெய்யாய் அறிவுணர்ச்சி மேன்மைசேர் அறநெறிகள்
நெய்யாய் மிதந்து நிற்கும் நிலையறியா நம்மக்கள்
அறிவுணர்ச்சி தாகத்தால் அவதியுறும் போதினிலே
மடைதிறந்து பாய்ச்சி மனம்போல் அருந்துதற்கு
திடமாய் வகைசெய்யும் சீர்திருத்த செம்மலே-நும்
சீர்மிகுந்த செயலினையும் பாரிற்குகந்த பணியினையும்
உள்ளத்தால் புகழ்கின்ருேம் உணர்ச்சியினுல் ஊக்குகின்
வெள்ளம்போல்உங்கள்பணிமேதினியில்பரவட்டும்.[ருேம்

பொய்யாமொழி என்று போற்றும் புலவர்க்கு
பெய்யா மழையும் பெய்யுமே—அல்லாமல்
நாட்டினில் பஞ்சம் நசிந்து பறந்தோடிட
புள்ளம்பாடி வாய்க்காலை புனிதமாய் கொண்டுவருவீர்

ஃ ஃ ஃ

எம். அழகு.
தி. மு. கழக செயலாளர்,
மதுரை மாவட்டம்.

அன்புள்ள "பொய்யாமொழி" ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

உலகெலாம் உய்வான் பொதுமறைவகுத்த ஆசிரியர் திருவள்ளுவனுரின் தெய்வக்கொள்கையை தேய்ந்த திராவிடத்திலுள்ள தமிழ்மக்கள் உணர்ந்து உய்யும் பொருட்டு வெளியாகும் "பொய்யாமொழி' என்னும் புரட்சி இதழ்கண்டு பெரிதும் இரும்பூ தெய்துகிறேன்.

ஒன்றே குலம் மென்னும் உயர்தனிக்கொள்கை யுடைய திராவிடத்திலே அண்டிப்பிழக்க வந்த ஆரியக் கூட்டம் சாத்திரம் கொண்டு பலவகைக்கோத்திரம் வகுத்து பாராண்ட திராவிடனைச் சூத்திரனுக்கிய முறை கண்டு ஆத்திரம் கொண்ட திராவிடன் ஒவ்வொரு வனுக்கும் தங்களின் "பொய்யாமொழி" மெய்யாகவே இன்பம் நல்கும் என்பதிலே ஐயம்இல்லை!

விதியென்னும் சதிச்சொல்லைக்காட்டி, மக்களின் மதியை மறைத்து தமிழனைக் கதியற்ற நிலைக்கு கொண்டு வந்த வேதியர்களின் வேதத்தை வெறுத்து, ஆதியிலே வள்ளுவனும், போதியடியிலே புத்தனும் சாதி இல்லை என்று ஓதிய நீதியை நிலைநாட்டி "ஆரியமாயை' அழியும் பொருட்டு, பொன்மொழிகளுதிர்க்கும், பொய்யாமொழி யின் பெரும் பணியைப் போற்றிப் புகழுகிறேன். வாழ்க பொய்யாமொழி வளம்பலபெற்று

… ஐயப்பனுக்கு

வரவேற்பும், வேண்டுகோளும்.

—:—

A. மெத்துசலா.

ஐயப்பா வாப்பா அருமையப்பா என்னப்பா
அழகேயப்பா
மெய்யப்பா எங்கள்மனம் வெகுதப்பா வீண் கூற்று
மல்லவப்பா,
சபரிமலை விட்டிறங்கி தரணிசுற்றி வருவதும்
சரிதானப்பா
தயவாக மக்கள்நிலை தனைநோக்கி கிருபைசெயத்
தயங்காயப்பா,
சித்தர்களும் முத்தர்களும் சீராக வாழுமிந்த
நாட்டிலப்பா
வத்தல்களும் தொத்தல்களும்வாழுவதேன் உன்னகத்தில்
வகைசொல்லப்பா.
பாடுபட்டுங்கூழின்றி பரிதவிக்கும் பாமரரைப்
பார்த்தாயாப்பா
நாடுவிட்டு நலங்கெட்டு நாடோறு மயல்நாட்டில்
நலிவாரப்பா.
ஊராரின் உழைப்பினிலே உண்டுகொழுத்தொருகூட்டம்
உலவுதப்பா
உன்கண்ணி லதைமறைக்க ஓதிடுவர் மந்திரங்கள்
உதவாதப்பா.
எழில்மங்கி உடலலுத்து ஏக்கமுறும எலும்புக்கூ
டெங்குமப்பா
ஏனென்று கேட்பார்க ளில்லையே.எனத்தேம்பி
இருப்பாரப்பா.
தர்மமிகும் சென்னைசெலும் போதுஉந்தன் இருக்கையை
விட்டெழுந்தப்பா
தாம்பரத்தில் சற்றேநீ தங்கியங்கு நிலைமைதனைத்
தானோக்கப்பா.
மணிபோன்ற மதலைகளை மார்பேந்தி விலைகூறி
வருவாரப்பா
இனியவரைக் காப்பாற்றி ஏதுமிலை எங்களிடம்
என்பாரப்பா.
கண்குழிந்து நாவுலர்ந்து கதறியழும் குழந்தைகளின்
காட்சியப்பா
மண்மீதி லவர்வாழ வழியின்றி வாடுவதும்
மதிதானப்பா.
அன்னவரின் பசிதணிய அளித்துவிட்டு நீவிருந்து
அருந்துமப்பா
சின்னமதி புல்லியரின் தேரேறி நீமகிழ்ந்து
செல்லாதப்பா,
அன்பிரக்கம் வல்லமைகள் அனைத்துமுனக் கிருக்குதென
அறைவாரப்பா
என்பிருக்கத் தோல்சுருங்கி ஏழைமிகக் கதறும் நிலை
ஏன்தானப்பா.
மழையின்றிப் பயிரெல்லாம் வாடுவது உன்மனத்தை
வாட்டுதாப்பா.
மதியோடு நதிபெருக வருமழையைப் பொழிவதுஉன்
மகிமையப்பா,
பாராள வந்தவருள் பதவிபெறக் குடுமிபிடி
பார்த்தாயாப்பா
சீராக ஆட்சிமுறை செம்மையுற நடத்தவழி
செய்துபோப்பா.
வந்ததற்கு ஏதேனும் நலங்காட்டி உன்வழியை
மருகிப்போப்பா
நொந்தவரை ஏமாற்றி நீபோனால் மக்களுனை
நோவாரப்பா.
ஏதுமுனக் கிதற்குமேல் எடுத்துரைக்க எனக்குஇட்ட
மில்லையப்பா
காதுபடக் கூறிவெந்தன் கடமைதனைச் செய்துவிட்டேன்
கருணையப்பா.

ஃ ஃ ஃ

எந்நாளோ!

M. S. S. லிங்கன்

—:—

அன்புத் தமிழ ராண்ட இந் நாட்டில்
அடிமை ஆண்டான் அறிவில் சாதிகள்
தமிழக மன்ன ராட்சியிற் காணோம்.
தளிர்பைங் கூழின் பூண்டென வடக்கே
நன்னா டெதுவென நாடித்திரிந்த
நரிபண் பாரியர் நம்நாட் டுயர்வும்
வளமுங் கண்டு வந்துநம் நாட்டை
வஞ்சகத்தாலும் நம் வாழ்வுக் கொவ்வா
மனுநூலாலும் நம் மன்னரை மயக்கினர்;
மயங்கிய மன்னரு மினுஞ்சில தமிழரும்
நரியர் வஞ்சக நயமொழி நம்பி
நம்நற் பண்பினை நலிந்திட விடுத்தனர்,
ஆரியரழிமொழி கேட்டநா ளதுமுதல்
ஆழ்ந்த அடிமையில் வீழ்ந்தே தமிழன்
இன்னலுற்றே இன்னு முய்வழி
எதுவென அறியா துழலு மிவரும்,
இவர்செந் தமிழும், கலைபண் பனைத்தும்
இன்னல் நீங்கியே இத்திரு நாட்டில்
முன்னைப் போல முழங்கிட இளைஞரும்
தனைமறந் தன்னியர் சூழ்ச்சியிற் சிக்கித்
தன்மொழி கலைகள் தனிநிலை அரசொடு
தவநிலை தன்னினுஞ் சிறப்புடைப் பிறந்த
பொன்னாட் டுரிமையு மெண்ணா துறையும்
என்னருந் திராவிடத் தின்னாள் மாந்தர்
தன்னிலை யுணர்ந்துத் தாயகப் பற்றொடு
'என்னா டிதுவென் வாழ்வுந் தாழ்வும்
வளமும் உணவும் உயிரும் உறையுளும்
வாழப் போவதும் வாழ்ந்து மரிப்பதும்
எல்லா மிதுவே யாதலி னிதனை
எவரும் அடிமையி லாழ்த்திட விட்டு
முடமுஞ் செவிடும் மூங்கையுங் குருடும்
மூளையு மில்லாத் தன்மைத் தாய
உருவினைப் போல உழன்றிட மாட்டேன்
உயர்வுடைத் தாயக உரிமைப் போர்க்கே
உவப்போ டளிப்பனென் உடற்பொரு ளாவி'
தன்னுணர் வெய்தித் தாய்த்திரு நாட்டை [யென
பொன்போற் பிரித்துப் புகழுறக் காத்துப்
புதுப் புதுக் கலைகள் வளர்க்க
என்தாய் நாட்டா ரெழுவதெந் நாளோ!

ஃ ஃ ஃ

பொய்யாமொழி

ஆசிரியர்: ம. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, மார்கழி 5 புதன். { மணி 17

" நெடுங்கடலும் தன்னீர்மை; குன்றும் தடிந்தெழிலி தானல்கா தாகி விடின் "

எழிலிதடிந்து நல்காதாகிவிடின் — முகில்மின்னி மழை பெய்யாவிட்டால், நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் — பெரிய கடலும் தன் இயல்பு குறையும்.

தடித்து - மின்னல்; தடிந்து - மின்னி; வினையெச்சம். கடல் தன்னீர்மை குன்றுதலாவது - மீன் முதலிய நீர்வாழுயிர்கள் பெருகாமையும், முத்து பவளம், முதலியன உண்டாகாமையுமாம்; தான்- அசை மழைக்குக்காரணமான கடல் வளத்திற்கும் மழையே காரணமாகும்.

சர்தார் படேல் மறைவு

★

நமது இந்திய உபகண்டத்தின் துணைப் பிரதமர் சர்தார் படேல் அவர்கள் முக்கியமான ஓர் சிறந்த தேசபக்தர். அவர் கரம்சாத் என்ற குஜராத் கிராமத்தில் 31—10—1875-ம் ஆண்டு ஜாவேர்பாய் படேல் மகனாக பிறந்தார். 1916-ம் ஆண்டு தேசியப்பெரும் பணியிலீடுபட்டு மகாத்மா காந்தியடிகளின் பிரதம சீடராயிருந்து அரும்பெரும்பணிபுரிந்தவர். பலஇன்னல்களோடு சுதந்திரம்பெற உழைத்தவர்.

மேலும் தன் வாழ்நாளிலேயே தொடங்கிய சுதந்திரப்போரில் அனுபவித்த இன்னல்களை துடைத்து தன் வாழ்நாள் முடியுமுன்னமேயே சுதந்திரம்பெற்று இந்திய துணைபிரதமர் பதவியுமேற்று நடத்திவந்தவராவார். அவரை அநேகர் இரும்பு நெஞ்சம் படைத்தவர் என்று போற்றிப் புகழப்பட்ட ஒரு கர்மவீரர். அவரின் செயல்களில் அதிக பராக்கிரமம் பொருந்திய பல செய்கைகளில் குறிப்பிடப்படவேண்டிய செய்கையானது. நம நாட்டில் காட்டு ராஜாக்கள் போல் முடிமன்னர்களாய் வெள்ளையன் ஆட்சியிலும் ஆடாமல் அசையாமல் பலரின் உழைப்பை உறிஞ்சி அட்டைபோ[...] கொழுத்து தனி அரசர்கள[...] [...]ழுந்து பெரும் பெரும் குட்டிக்குபேரர்களை மட்டந்தட்டி இந்நாட்டில்மக்களையடக்கி ஆண்டுகொண்டிருந்த தான் சுகித்திருக்கவே பரமனால் அருளப்பட்ட வரப்பிரசாதம் என்றும் காளியருள் தங்களுக்கு உண்டு நேரில் வந்தே அன்னூடம் கனவில் உரைத்து அதுகொண்டுதான் தங்கள் ராஜ்ய பாரம் செய்துவருவதாய் பல நம் பாமரர்கள் வாழும்நாட்டில்நம்பச்செய்து முடிமன்னர்களாய் தலைமுறை தலைமுறையாய் ஆண்டுவந்த மகாராஜாக்கள் முடியை ஒழித்து குடிமக்களுக்காகிய ஓர் ஒப்பற்ற ரர் வீஎன்றால் மிகையாகாது.

இந்நாட்டில் பழமையில் நெளிந்து முடி மன்னர்கள் வாழையடி வாழையாய் முடி புனையவே நாட்டில் பிறந்தவர்களென்று பல சோதிடர்கள் கூறி இன்றுவரைகூட கூறிக் கொண்டிருக்கும் சோதிட மூடநம்பிக்கையை முறியடித்து இனி அவ்வாறு குடியாட்சியில் ஒரு முடி மன்னர்கள் தேவையில்லை குடியாட்சியில் ஜனநாயக முறைப்படி மக்களால்தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களே ஆளும் அமைச்சர்களாகவரும்படி செய்து திடீரென வயிறெரியவிடாமல் யானையை படுக்கவைத்து குதிரைக்கு மட்டமாக்கி தன் வாழ்நாளிலேயே வைத்து காட்டிய செயற்கரிய செயலை முன்னதாக இந்நாடுக்கு செய்து காட்டி வழிதிறந்த ஒரு பெரியார். சிலர் இன்னும் சாதாரண குடிமகனாக செய்யாமல் நஷ்டஈடு கொடுத்து அவர்களை உல்லாசபுரியில் உலாவ விட்டுவிட்டாரென்றும் நினைக்கலாம் ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த பழக்கத்தை மாற்றியமைப்பது சாமான்யமானதல்ல,

சொல்லில் சொல்வதை செயலில் செய்ய பல சங்கடங்கள் உண்டு நமது சர்தார் படேல் அவர்களின் பூர்வீக சொத்து என்னவெனில் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைப்படி ஒரு செண்டு நிலம்கூட சொந்தமாய் உடையவரல்ல என்று ஓரளவு தெரிகிறது. அப்படியிருந்து ஏன் நஷ்டஈடு கொடுக்க இசைந்தார் என்று கேள்வி எழுப்பும் எவரும் தாங்களும் பல அதிகாரங்கள் கையில் கிடைக்கும்போது அதிக வயதுக்குகந்த முறையில் சில காரியங்கள் செய்ய நிதானமாய் தான் வழிதிறப்பது வழக்கம் இதை ஒட்டிய மற்றைய இன்னும் வேண்டிய பொருளாதார சமத்வமடைய இனி வருங்காலத்தில் இன்றும் பெரிய பெரிய மிட்டா மிராசுகளும் மனம் திரும்புவதற்கு ஆக முன்னைய மகாராஜாக்களை

...து ஒ... ...ரிய மிராசுதார் நிலையில் ஆக்கிவைத்துள்ள ...செயலைக்காட்டி மற்றையவர்களோடு ஒப்ப உருப்படும்படி செய்வதற்கு வழி காட்டிய பெரியார்தான் நமது மறைந்த மாவீரர் சர்தார் படேல் அவர்களாவார்கள் என்றால் மறுப்பதற்கில்லை. இன்றோடு அவர் நம்மைவிட்டு பிரிந்து 6 நாள் ஆகிவிட்டது. அவரின் பிரிவு நாட்டுக்கு நஷ்டம். மறைவுகுறித்து வருந்தும் அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும் அவரது பிரிவால் வருந்தும் மற்றைய நாட்டுமக்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தினம் தினம் ஏகாதசி!

தமிழ் நாட்டில் சிவபக்தர்கள் கூறுவார்கள், ஏகாதசி யாரே, ஏகாதசியாரே! சிவன்ராத்திரியாரை சிம்பலாகாதோ என்று சிலேடையாய் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் உள்ள மைத்துனர் உறவு என்ற முறையில் விளையாட்டாய் பரிகசிப்பார்கள். ஆனால் கூறுவது சிவ பக்தர்கள்.

தவிர இந்த ஏகாதசியின் உள் வரலாறு எப்படியிருப்பினும் தமிழ்நாட்டில் பலவிடங்களில் ஏகாதசியே அதிகமாய் மிஞ்சிவிட்டது. ஆனால் அதற்குரிய மறுநாள் துவாதசிக்குத்தான் வழியே இல்லை. சென்ற 2, 3 வாரங்களாய் சிலருக்கு கிடைத்த 2, 3 நாள் அளவு உணவுகூட இவ்வாரம் ஏகாதசியாகிவிட்டிருக்கிறது ஒருசமயம் ஏகாதசியில் இறப்பவர்கள் நேரே வைகுண்டம் செல்ல வாய்ப்பேற்படுத்த எண்ணிய உத்தமர்களின் எண்ணம் மக்கள் வீணே பாக்கி நாளில் இறந்தால் நரகத்திற்குப் போகநேரிடும்என முன்யோசனையுடன் வெகுஜாக்கிரதையாக 2, 3 வாரமாய் மக்களை பட்டினியிலேயே போட்டு வத்தும்படி வைத்து ஏகாதசிக்குரிய வைகுண்டம் காட்ட வகை செய்து விட்டிருக்கிறார் சப்ளை செய்பவர்கள். தமிழ் நாட்டில் விரல் காட்டுவது புண்ணியம் என்ற கதை ஒன்றுண்டு. அதாவது யாராவது பிச்சையெடுப்பவர்கள் தன்வீட்டில் வந்து யாசகம் கேட்கும்போது தான் போட மனமில்லாவிடினும் அல்லது போடும் வாய்ப்போ திறமையோ இல்லாவிடினும் அதற்காகவே ஆண்டவனால் படைக்கப்பட்டதாக கற்பித்துள்ள கற்பனைப்படி ஆள் காட்டி விரல் என்ற விரலால் வேறு ஒருவர் வீட்டைக் காட்டுவது பழக்கத்திலுண்டு அதைமறவாமல் ஞாபகத்திலிருத்திய D. S. O. & T. S. O. அவர்கள் தன்னுடைய ஆள்காட்டி .விரலால் சிலவாரங்களாகவே தொடர்ந்து எகாதசியைக் காட்டி வைகுண்டத்திற்கு அனுப்ப எண்ணிவிட்டார்கள் போலும். மக்களும் ஒருவாறு சம்பிரதாயத்தை ஒத்துக்கொள்ளுகிறார்களே தவிர, மோக்ஷம் போவதை உண்மையாகவே ஒத்துக்கொள்ளாமல் அரிசி விலை எவ்வளவுஏறினும் பணமுள்ளவர்கள் கள்ளமார்க்கட்டு இருக்குமிடம் கண்டுபிடித்து உயிரைக் காப்பாற்ற எண்ணுகிறார்கள் ஆனால் மாதச்சம்பளக்காரர்களும் ஏழைமக்களும் அவதி சொல்லும் தரமல்ல. இந்நிலையில் டில்லி சட்டசபையில் வீற்றிருக்கும் சென்னை சார்பில் சென்ற திரு. கிருஷ்ணசாமி பாரதி அவர்களால் அங்குகேட்கபட்ட கேள்வியை காணுங்கள் விசித்திரம் ஆனால் வேதனை தரும் விளக்கம்.

இவ்வளவு பற்றாக்குறையுடைய நம்மாகாணத்துக்கு வழங்கிகிற உணவுக்கோட்டா அளவுக்கும் குறைவு. மற்றைய பம்பாய் மாகாணம் போன்றவைகளுக்கு அளித்துள்ள கோட்டா அதிகம் ஏன் இந்நிலை? யெனக் கேட்டார். மேலும் அதுமட்டுமா? சென்னை மாகாண அரிசிக்கு விவசாயிகளுக்கு கொடுக்கும் விலை 1 மணங்கு அரிசிக்கு ரூ. 8—4—3 வங்க மாகாணத்துக்கு ஷை ரூ 12—0—0 பம்பாய் பீகார் அரிசிக்கு ரூ. 17—0—0 உத்திரப்பிரதேசத்துக்கு ரூ. 24—0—0 இந்தமாதிரி ஒரு மாகாண விவசாயிகளுக்கும் மற்றமாகாண விவசாயிகளுக்கும் விலை தாரதம்மியம் அதிகம் இருப்பதால் அரிசியின் தரம் உயர்வு என்று கருதிவிடவேண்டாம். நம் மாகாண அரிசியைவிட மட்டம், ஆனால் அதற்குத்தான் விலையதிகம். எப்படி இதைக்காணும்போது நம்மாகாண விவசாயிகள் விளைபொருளில் அதிகம் ஊக்கம் காட்ட முடியும் விளைபொருள்கள் எவ்வாறு பெருகும். பஞ்சம் எப்படித்தீரும். வருஷத்துக்கொரு முறை வந்து கொண்டிருக்கிற ஏகாதசி தினம் தினம் பெருவாரியான இல்லம் தோறும் வந்து தங்கிவிட்டதைப்பற்றி எப்படி எழுதாமலிருக்கமுடியும். இந்நிலையை நீடிக்கவிடாமல் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அதிகாரிகள் ஆவனச்செய்து மக்களை பஞ்சக் கொடுமையினின்று நீக்கவகைசெய்யுங்கள் என்று வேண்டுகின்றோம்,

(சுமார் 3 வாரமாய் கொடுக்கும் ரேஷன் 300 மூட்டைகள் கொடுபட வேண்டிய இடங்களுக்கு மூட்டை 30 க்குள் எப்படியிருக்கும் நிலைமை.)

விரைவில் வெளிவரும்.

கற்பனைத் தென்றல் • அற்புத நடைகள் • விற்பன்னர் புரட்டுகள்

இவைகளை விளக்கி காட்டிடும்

"துரோகி?"

(தொடர் நாடகம்)

கதை வசனம்: கு. ஆண்டியப்பன்
சு இராமமூர்த்தி

தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் "பொய்யாமொழி" யின் சந்தாதாரராகச் சேர்ந்து வளர்ச்சியடையச் செய்யுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழக ஆண்டு விழா

மாணவர் முன்னேற்றக் கழக துவக்க விழாவும்

தோழர்கள் E. V. K. சம்பத்; A. K. வேலன், N. C. பன்னீர்செல்வம், அம்பில் தருமலிங்கம் முதலியவர்கள் கலந்துகொண்டனர்

செயங்கொண்டம், டிச. 17

செயங்கொண்டான் திராவிட மாணவர் முன்னேற்ற கழகத்தை தோழர் E. V. K. சம்பத் அவர்கள் திறந்து வைத்து கழகக்கொடியை இலட்சியமுழக்கத்துடன் ஏற்றுவித்தார் மாலை 6 மணிக்கு காந்தி சதுக்கத்தில் அழகிரி மேடையில் குற்ருலம் N.C பன்னீர்செல்வம் தலைமையில் திராவிட மாணவிகள் முன்னேற்றக்கழக செயலாளர் சி. கமலம் நாட்டுப்பண் பாடினர். முன்னாள் செயலாளர் தோழர் வை. இராஜகோபால் ஆண்டு அறிக்கை வாசித்தார். அம்பில் தோழர் தருமலிங்கம் அடக்குமுறை ஆட்சியின் போக்கை கண்டித்தும், குன்றத்தூர், நாரணமங்கலம் தடையை விளக்கியும் ஒவ்வொருவரும் அழகிரியாக, வேலாயுதமாக, தாலமுத்து-நடராசன்களாக மாற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தன் பேச்சை முடித்தார். கரந்தை தோழர் A. K. வேலன் (எரிமலை ஆசிரியர்) தமிழகத்தின் வரலாறு, வாழ்ந்த மன்னர்களின் வீழ்ச்சி, ஆரியத்தின் சூழ்ச்சி முதலியவைகளை விளக்கி திராவிடநாட்டு பிரிவினையின் அவசியத்தைப்பற்றி அறிவுறித்தி சுமார் 1½ மணிநேரம் பேசினர். பிறகு நீண்ட கைத் தட்டலுக்கிடையே தோழர் E. V. K. சம்பத் (புதுவாழ்வு ஆசிரியர்) "தற்கால அரசியல்" என்பது பற்றி சுமார் 2¼ மணிநேரம் பேசினர். திராவிட மாணவிகள் முன்னேற்றக் கழக சார்பிலும், மாணவர் முன்னேற்றக் கழக சார்பிலும் மாலை அணிவிக்கப்பட்டது பின்னர், திராவிட மாணவர் கழகத்தைப்பற்றி மாணவர் கழக அவசியம் மாணவர்கள் செய்ய வேண்டிய தொண்டு கழக இலட்சியம் முதலியவைகளை விளக்கி எதிர்கால திராவிடத்தை செம்மை படுத்தி அடிமையை போக்கும் படை "மாணவர் படை" என்றும் மாணவர்கள் உல்லாச பொழுது போக்கும் நேரத்திலே அறிவு வளர்க்கும் நூல்களையும், வரலாற்றுச் சுவடிகளையும், பொருளாதாரத் திட்டங்களையும், நன்கறிய வேண்டுமென்றும், தி. மு. கழகம் போராட—உரிமை முரசு கொட்ட இருக்கிறது. மாணவர்கள் போராட்டத்தில் இறங்க வேண்டியதில்லை கல்வியை நன்குகற்று உலகவரலாற்றை அறிந்து ஆணவ ஆட்சி காரர்களைப்பற்றிப்படித்து நம் மந்திரிகளுக்கும் அவர்களுக்கும் ஒப்பிட்டுப்பார்த்து, நல்லொழுக்கம், பண்பு முதலியவைகளுடன் எதிர்கால திராவிடத்தை செம்மைபடுத்த தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர். நாட்டு நிலையைப்பற்றி கூறும்போது உலக வரலாற்றிலே வீழ்ந்த மன்னர்களையும், தாழ்ந்த நாட்டையும், புல்லைதின்ற சர்வாதிகாரிகளையும் சுட்டிக்காட்டி. அடக்குமுறை செய்யும் ஆளவந்தாரை குறிப்பிட்டு, நாடகத்திற்கு தடை, புத்தகம் பறிமுதல், சொத்து சப்தி, கூட்டங்களுக்கு தடை, முதலியவைகள் வளர்ந்துக்கொண்டு போனுல்; வீழ நேரிடும் என்று இடித்துறைத்தார்.

மீண்டும் பேசும்பொழுது தமிழகம் தாழ்ந்தவிதம் வீழ்ந்த தமிழகம் உரிமைபெற்றவழி திராவிட நாட்டு பிரிவினையின் நோக்கம் இவைகளை விளக்கி நடத்திவரும் சுதந்திர சர்க்காரை நம்பி பேச்சாளர்கள் வெளிவர யோக்கியதையில்லை யென்றும் அடக்குமுறை அளவுக்கு மீறி போய்க்கொண்டிருக்கிறதென்றும் குன்றத்தூர் நாரணமங்கலம் முதலிய சிறு ஊர்களில் யாதொரு கலவரமும் இல்லாத சமயத்திலே எட்டுத் தடவை சுட்டும் சிறைபிடித்தும் சர்வாதிகாரம் செய்துவருகிற மந்திரிகளின் நிலையையும், மந்திரிகளின் சுற்றுப்பிரயாணம் வீண்செலவு இவைகளை விளக்கியும் கைத்தறி நெசவாளர்களின் துயர் வெளிநாட்டு அரிசி இறக்குமதியில்லாது ரேஷனில்பாம் அவதி முன்பு போலீஸ் இலாக்கா குற்றம் செய்பவர்களையும் கொலைசெய்பவர்களையும்பிடித்து தண்டிக்கத்தான் தேவையாயிருந்தது இப்போது பேச்சாளர்கள் எங்குசெல்லுகிருர்கள் என்ன பேசுகிருர்கள் என்பதை அரசியலாருக்கு தெரிவிக்க பயன்படுகிறது எனக்கூறி லாலா லஜபதிராய், கோகலே வ.உ.சி. தன்னலமற்ற காந்திஜி முதலியவர்கள் வளர்த்த காங்கிரஸ் இன்று பதவி வேட்டையாடுபவர்களுக்கும் தேர்தல் காளான்களுக்கும் பயன்படுகிறது. திராவிடம் பிரிந்தால்தான் இந்நாட்டு மக்கள் வெளிநாட்டிலும் நம் நாட்டிலும் வேதனைப்படாமல் மக்கள் மக்களாக வாழ முடியுமென்று நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

உள்ளூர், வெளியூரிலிருந்து சுமார் 2000க்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். அழகிரிமேடை மின்சார விளக்குகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஒலிபெருக்கியும் அமைக்கப் பட்டிருந்தது. செயலாளர் நன்றிகூற 9½ மணிக்கு விழா முடிவுற்றது.

செயங்கொண்டம், 19—12—50.

விளம்பர உறுப்பினர்கள்,
தி. மு. க. & தி. மா. மு. க.

அறிவிப்பு

திருச்சி ஜில்லா கலெக்டர் ஒரு வருஷ லீவுடன் ரிட்டேடாவதாக தெரிகிறது. ஷ விஷயமாக சிலர் டாக்டர் ராஜன் அவர்களுக்கு சொந்தமான திருவேங்கிமலை பண்ணையில் நெல் ஸ்டாக் இருந்ததாகவும் அதை கலெக்டர் கொள்முதல் செய்ததாகவும் அதற்காக கலெக்டரை மாற்றப் பட்டதாகவும் சொல்லுகிருர்கள் இது ஆதாரமில்லாத வீண் பிரசாரம் என்பதை நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த கட்சியினராயினும் ஒரு விஷயத்தை வெளியில் சொல்ல ஆரம்பிக்கும்போது, நன்ருக சிந்தனைசெய்து தக்க ஆதாரத்துடன் சொல்லவேண்டும். அர்த்தமில்லாத ஆதாரமில்லாத வதந்திகளை பரப்புவதினுல் பொதுவாக நாட்டுமக்களுக்கே திங்கு ஏற்படுவதுடன் நாட்டு முன்னேற்றத்திற்கும் குந்தகம் ஏற்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ. இ. காதர்கான்.

228284
சென்னை-600 008

வீரத் தமிழ் இளைஞன்

சென்றவார தொடர்ச்சி. ★ ஆ. இராமசாமி.

செங்: மதிமன்னவ! அனந்தவன்மன் எம்மாத்திரம்? வெங்குருதிசாக்காட்டில்விளையாடும் தோள்படைத்த நாம் எங்கே! கலகவிசயன் கூட்டத்தில் தோன்றிய அவனெங்கே...! அன்னார் கலங்கி ஓடவேண்டும். அல்லது அவர்களின் தலைகள் தரையில் உருள வேண்டும். இரண்டில் ஒன்று நிச்சயம். இன்றேல் வீரமரணம் எய்வேன். என் உடைவாள் மீது ஆணை! எனக்கு படைத்தலைமை தந்தருளவேண்டும் (வேகமாக கூறுதல்).

மன்னன்: இளைஞனே உன்பேச்சு காதுக்குக் கேட்க இனிமையாக இருக்கிறது. ஆனால்......! சரி நீ யார்?

செங்: மன்னவ! (வீரம்தொனிக்க) நான் கடந்த போரில் தங்கள் படையில் படைத் தலைவராகவும் தங்கள் மெய்க்காப்பாளராகவும் இருந்த இளங்கோவின் மகன். என் பெயர் செங்குட்டவன்.

மன்னன்: (ஆச்சரியத்துடன் மகிழ்ச்சிபொங்க) இளங்கோவின் மகன் செங்குட்டவனா நீ! வீரன் மகன் வீரன்தானே....

அமைச்சர்: சிங்கம் சிறுநரிமுன் மண்டியிடுமா? புலிக்கு பிறந்து பூனையாவனா......? ஆனால் பச்சை அரும்பு மீசையுடையோன். பகைவனோ துணைப் பலமும் பெற்று பலவானாக காட்சியளிக்கின்றான். அவனது குன்றரணும் பெருவலிமை உடையது... இளங்கன்று பயமறியாது திறமை இருக்கலாம். அதற்காக....

மன்னன்: ஆம்! திறமைமிக்க வெற்றி வீரனையே அனுப்ப வேண்டும். அடுத்த படைக்கென்றால் செங்குட்டவன் செல்லட்டும்.

(கலங்கிய கண்களுடன் செங்குட்டவன்,)

செங்: மன்னவ! எனது தமிழ்வீரத்தை தாங்கள் மங்க வைக்கவேண்டாம். நான் போரிலே வெற்றிபெற்று வருவேன் என்று தாயிடம்வேறுகூறி விடையும் பெற்று வந்துவிட்டேன், மீன்குஞ்சுக்கு நீச்சல் கத்துத்தர வேண்டியதில்லை. மன்னவ! என் தந்தை வீரனென்றீர் அவர் பெருமை மங்குவதா? மயிரொன்றை இழப்பினும் கவரிமான் உயிர்தரியாதே! புலிக்குப்பிறந்து பூனை ஆவதா? அரசே! யாது சொல்வேன். சென்றபோருக்கு என் தந்தை போர்தலைவராக சென்றார், போர்முடிந்தபின் அவர் எங்குசென்றார் என்று தெரியவில்லை. இரணகளத்திலும் அவர் உடல் அகப்பட்டதாக தெரியவில்லை. புறமுதுகுகாட்டி ஓடிவிட்டதாக யாவரும் பேசுகின்றனர். அதைப் போக்கி எனது பரம்பரை வீரமரபு என்று காட்டவாவது அனந்தவன்மன் மேல்போர்தொடுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மட்டும் படைத்தலைமைதர வேண்டுகிறேன். மன்னவ! பிறகு தங்களிட்டம், (வணங்குகிறான்).

மன்னன்: (கோபமும் சோகமும் கலந்தகுரலில் ஆவேசத்துடன்) வீரக்குழந்தாய்! உன் தந்தைகோழையென்று யார் கூறியது? உன் தந்தை ஆயிரக்கணக்கான வரிடம் போரின் நடுவே குதிரையின் மேலிருந்தும், யானை மேலிருந்தும் போரிட்ட மாவீரன் கோழையல்ல. உன் தந்தை தன்னலமற்ற தியாகி! கயவர் உரைகண்டு கலங்காதே! துரோகபுத்தி படைத்த சுயநலமிகள் வெளிப்பேச்சைக்கேட்டு வருந்தாதே உன் தந்தை என்னுயிர் தோழன் உன் தந்தை வீரத்தை தியாகச் சிந்தனையை உரைக்கின்றேன்; அவையறியக்கேள் (கலங்கியபடி) சேரப்படைக்கும் நம் படைக்கும் கொடியவாட்போர் நடந்தது. என்னோடு தோளோடு தோள் கலந்து உன் தந்தையும் போரிட்டார். இருவரும் சேர்ந்து பகைவர் பலரை வெட்டிவீழ்த்தினோம், வெற்றிமுரசு எட்டுத்திக்கும் அதிரக்கொட்டினோம். வரும்வழியில் பலநதிகளையும், குன்றுகளையும்கடந்துவந்தகளைப்பினாலும் மயக்கத்தினாலும்; காயங்களின் வலியாலும் படுத்தோம். அப்பொழுது யாரோ ஒருபேடி சோழநாட்டில் பிழைக்க வந்த நாடோடி இராமன் மாவீரன் வாலியை மறைவிலிருந்து தாக்கியது போன்று போர்முறை தெரியாத புல்லன் உன் தந்தையின் காலை படுத்துறங்கும் சமயம் வெட்டிவிட்டான் நான் உறங்கினேன். வெட்டுப்பட்ட வேதனையில் துடித்து எழுந்த இளங்கோ என்னை வெட்டவந்த சமயம் துள்ளிக்குதித்து அவனை விரட்டினார் நான் திடுக்கிட்டு விழித்து அந்த கோரக் காட்சியைக்கண்டு நண்பா! என்று அலறினேன் உயிர் இழந்தார் உன் தந்தை. ஐயோ அதை நினைத்தால் மனம் துடிக்கின்றது. இரத்தம் கொதிக்கிறது என்செய்வேன் கண்ணீர் கலங்கினேன். அப்பொழுதுதான் இதோ இருக்கும் (அமைச்சரைக்காட்டி) அமைச்சரும் படைவீரரும் வெட்டிவிட்டு ஓடிய அந்த போர்முறை தெரியாத புல்லனை சூழ்ச்சிக்காரனைப் பிடித்து வந்தனர். அங்கேயே உனது தந்தையையும் அடக்கம் செய்து வீரசமாதியும் கட்டினோம். தன்னை வந்தடைந்த ஒரு புறாவின் உயிரைக்காக்கவேண்டி முன்னம் சிபிசக்ரவர்த்தி தன் சதையை அறுத்துக் கொடுத்தான். உன்தந்தையோ என்மூலம் தேசத்தையும், என்னையும் காக்கக்கருதி தன்னுடல் வலியையும் அறியாமல் கால்வேதனையோடு பத்து அடி தூரத்தில் படுத்து உறங்கிய என்னை காப்பாற்றினார். அவ்வீரத்தியாகியை அறியாது உளரும் மடையவர்யாவர்? சோழநாட்டில், இத்தமிழகத்தில் கோழைகள் இருப்பாரோ...... ஒரு கையிலே கேடயம் தாங்கியும் மற்றொருகையிலேவேல்; வாள் கொண்டு போராடி மார்பிலே காயம்பட்டு வீரமரணம் அடைவதன்றோ தமிழர்வீரம். என்மைந்த! உனது துடிப்பையும் ஆவேசத்தையும்கண்டு உனக்கு படைத்தலைமைத் தந்தேன். நீ வீரன் மகன் சுத்த வீரன்!

[அடுத்த பக்கம்]

செய்திகள்.

திராவிட மாணவிகள் முன்னேற்றக் கழகம்,

சேயங்கோண்டம்.

செயங்கொண்டத்தைச் சேர்ந்த மேலக்குடி இருப்பு தோழியர் சி. கமலம் இல்லத்தில், தோழியர் மங்கையர்க்கரசி தலைமையில் திராவிட மாணவிகள் முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது.

செயலாளர் சி. கமலம், துணைச் செயலாளர் சு. மங்கையர்க்கரசி; விளம்பர உறுப்பினர் எழிலரசி; பொருள் காப்பாளர் மேரிச்செல்வி; மற்றும் இவர்கள் உள்ளிட்ட நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

தீர்மானங்கள்:—

1. நாரணமங்கலத்தில் பேச்சுரிமையைக்காக்க சிறை சென்ற ஏழு தோழர்களையும் இக்கழகம் பாராட்டுவதோடு அரசாங்கத்தின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடனும்,

2. அறிஞர் அண்ணாவின் கட்டளைப்படி நடப்பது எனவும்.

3. இவ்வூருக்கு வர இருக்கும் தோழர் ஈ. வே. கி. சம்பத்திற்கு கழகத்தின் சார்பாக மலர் மாலை ஒன்று வாங்கிப்போடுவதெனவும்,

4. ஆரியமாயை வழக்கின் தீர்ப்புப்படி அபராதம் கட்டமறுத்து சிறை சென்று திருப்பி விடுதலை செய்யப்பட்டதும், பின் அபராதத்தொகையை வசூலிக்கும் பொருட்டு தி. மு. க. பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களுக்குச் சப்தி வாரண்ட் கொடுத்து, திராவிடநாடு அலுவலகத்தில் புகுந்து நான்கு பேல்கட்டு பேப்பர்களை பறிமுதல் செய்த அரசாங்கத்தின் கொடுமையான செயலை இக்கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஃ ஃ ஃ

அனுதாபக் கூட்டம்

உ. தா. ஜெயங்கொண்டத்தில் 15—12—50ல் இந்திய உபகண்டத்துணைத்தலைவர் சர்தார் படேல் அவர்கள் இயற்கை எய்திய செய்தி நண்பகல் 1 மணிக்கு தெளிவாய்தெரிந்து அரசியல் கொடிகளை அரை அளவில் இறக்கியும் 6-30மணிக்கு ஜெயங்கொண்டம் பஞ்சாயத்து போர்டு ரேடியோ நிலயத்திலிருந்து காங்கிரஸ் தோழர்களும் ஆபீஸ் குமாஸ்தாக்கள் முதலிய பலரும் ஊர்வலமாய் சென்று காந்தி சதுக்கத்தில் அ. இ. காதர்கான், அவர்களால் அவருக்கு இறங்கற்கூறி 5 நிமிஷம் மவுனமாயிருந்து பின்னர் கலைந்து தங்களிருப்பிடஞ் சென்றனர். பல கடைகள் 4—30முதல் 6 மணிவரை மூடப்பட்டது.

7ம் பக[illegible]

செங்: மன்னவ! எனது தந்தையின் வர[illegible] அறிந்தேன். கோழையென கூறியவர் புலியெனக் கூற போர்க்களத்திற்கு செல்லவிரும்பிகிளம்பினேன் என் தந்தையை வீரரென்றீர்கள், என் தந்தை வீரர் கோழையல்லவென அறிந்தேன். பெரு மகிழ்ச்சி!

அமைச்சர்: தாயிடம் விடைபெற்று தயாராயிரு இளைஞனே! உனது புகழ் பரவட்டும் திக்கெட்டும்.

செங்: (வணங்கி) காலமறிந்து நற்கருத்தைக் கூறி நாட்டை நல்வழிப்படுத்தும் அமைச்சரேறே! வணக்கம், கட்டளைப்படியே நடக்கதயாராய் இருக்கிறேன் இனிமேல் நான் நாட்டாசை வெறியரை வீழ்த்த உழைப்பதுடன் வஞ்சக உருக்கொண்ட போர்முறை தெரியாத புல்லர்கள் இந்நாட்டில் புகுந்து அட்டகாசம் செய்வதையும் ஒழிக்க .தீர்மானித்து விட்டேன்.

மன்னன்: நாட்டுக்குத்தேவையான கருத்து-ஆதரிக்க வேண்டிய திட்டம் இன்று சபை இத்துடன் கலையட்டும் (யாவரும்எழுதல்) திரை.

தயாராகிறது!

தைப் பொங்கல் நாளில் பொய்யாமொழி தரும்

பொங்கல் மலர்

மலருக்கு கதை, கட்டுரை அனுப்பும் அன்பர்கள் **30-12-50**வுக்குள் அனுப்பி வைக்கவும்.

ஏஜண்டுகள் தேவையுள்ள பிரதிகளுக்கு முன்பே அறிவிக்கும்படி கோருகிறோம்.

விளம்பர விகிதம்.

வெளி அட்டை.		உள் அட்டை.	
முழுபக்கம்	ரூபா. 40/-	முழுபக்கம்	ரூபா. 30/-
½ பக்கம்	ரூபா. 25/-	½ பக்கம்	ரூபா. 20/-

சாதாரண உள்		
முழுபக்கம்	ரூபா.	25/-
½ பக்கம்	ரூபா.	15/-
¼ பக்கம்	ரூபா.	10/-

விபரங்கட்கு:

ஆசிரியர்,

"பொய்யாமொழி" அலுவலகம்,

ஜெயங்கொண்டம்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Katcheri Street, Jayankondacholapuram.